සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

44 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**
- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நபித் தோழர்கள் முதலில் ஹிஜ்ரத் சென்ற இடம்
(1) தாயிப் (2) ஹபஷா (3) குபா (4) ஷாம் (5) யத்ரிப்

**2.** 'காப்பதுன் லிந்நாஸ்' என்பதன் கருத்து யாது?
(1) முழு மனித சமுதாயத்துக்கும் உரியவர்
(2) இறுதித் தூதர்
(3) நம்பிக்கைக்குரியவர்
(4) உண்மையாளர்
(5) இறுதி நாளில் உம்மத்துக்காக மன்றாடுபவர்

**3.** அல்லாஹ்வின் திருநாமங்களில் 'படைப்பாளன்' என்பதைக் குறிக்கும் சொல்
(1) அர்ரஹ்மான் (2) அர்ரஸ்ஸாக்
(3) அல் காலிக் (4) அல் குத்தூஸ்
(5) அஸ்ஸலாம்

**4.** அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்கு வழங்கப்பட்ட ரிஸாலத்தில் உள்ளடங்கியிருக்கும் பிரதானமான நான்கு விடயங்கள்
(1) அகீதா, இபாதத், ஷரீஅத், ஸிபாத்
(2) அகீதா, இபாதத், ஷரீஅத், அக்லாக்
(3) இபாதத், அகீதா, ஸிபாத், அக்லாக்
(4) ஷரீஅத், இபாதத், நுபுவ்வத், ஹிதாயத்
(5) அகீதா, ஹிதாயத், இபாதத், அக்லாக்

**5.** மறுமை நாளில் காணப்படும் 'மகாமுன் மஹ்மூத்' என்பது
(1) ஷபாஅத் செய்வதற்காக மக்களை நபி (ஸல்) அழைத்துச் செல்லும் இடம்
(2) மக்கள் குழுமியிருக்கும் இடம்
(3) உயிரினங்கள் உயிர் பெற்றெழும் இடம்
(4) மக்களைச் சூழ்ந்து மலக்குகள் அணி வகுத்திருக்கும் இடம்
(5) மறுமை நாளில் முஸ்லிம்கள் நீர் அருந்தும் இடம்

**6.** பிரபலமான ஸிஹாஹுஸ் ஸித்தா கிரந்தங்களைத் தொகுத்த அறிஞர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி யாது?
(1) புகாரி, முஸ்லிம், நஸாஈ, இப்னு ஹஜர்
(2) நவவி, நஸாஈ, ஸுயூத்தி, திர்மிதி
(3) அபூதாவூத், ஸுயூத்தி, திர்மிதி, இப்னுல் கையூம்
(4) புகாரி, முஸ்லிம், கஸ்ஸாலி, அபூதாவூத்
(5) புகாரி, முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



7. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பலஸ்தீனில் பிறந்தவர்.
B - பிக்ஹுல் அக்பர் நூலின் ஆசிரியர்.
C - 'ஆலிமுல் குறைஷ்' என்ற சிறப்புப் பெயருக்குரியவர்.
D - 'உஸூலுல் பிக்ஹ்' கலையின் முன்னோடியாவார்.
E - இஸ்திஹ்ஸானை அதிகம் பயன்படுத்தியவர்.
F - ஹனபி மத்ஹபின் ஸ்தாபகர்.
மேலுள்ளவற்றுள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடன் தொடர்புடைய கூற்றுக்களை மட்டும் கொண்ட தொகுதி யாது?
(1) A, B, C (2) A, C, D (3) B, C, F (4) C, D, E (5) D, E, F

8. பின்வருவனவற்றுள் குத்பா **இடம்பெறாத** தொழுகை
(1) ஜும்ஆ (2) இஸ்திஸ்கா (3) ஈதைன் (4) ஜனாஸா (5) குஸூபைன்

9. முஸ்லிம்களுடன் ஹுதைபியா உடன்படிக்கையில் ஈடுபட்ட பிரிவினர்
(1) அவ்ஸ் கோத்திரத்தார் (2) குறைஷிக் கோத்திரத்தார்
(3) கஸ்ரஜ் கோத்திரத்தார் (4) அஹ்லுல் கிதாப்கள்
(5) தாயிப்வாசிகள்

10. இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் பின்பற்றும் மத்ஹப்
(1) மாலிகி (2) ஜஃபரி (3) ஹனபி (4) ஹம்பலி (5) ஷாபிஈ

11. "ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை அல்லது ஒரு பயிரை நாட்டி அதிலிருந்து ஒரு பறவை அல்லது ஒரு மிருகம் அல்லது ஒரு மனிதன் பயன்பெறும் காலமெல்லாம் அவனுக்கு அது ஸதகாவாக அமையும்" என்ற ஹதீஸ் பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?
(1) கிலாபத் (2) வஸிய்யத் (3) இமாரத்
(4) நஸீஹத் (5) அமானத்

12. 'மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி' என்ற கருத்தில் நோக்கப்படும் இஜ்மாஉ யாது?
(1) இஜ்மாஉ இஜ்திஹாதி (2) இஜ்மாஉ முரக்கப் (3) இஜ்மாஉ நக்லி
(4) இஜ்மாஉ ஸுகூதி (5) இஜ்மாஉ அக்ஸரிய்யா

13. "மறுமையில் முஃமினின் மீஸானில் நல்லொழுக்கத்தை விடவும் எடை கூடிய இன்னொன்று இருக்க முடியாது" என்பது
(1) அல்-குர்ஆனிய வசனம் (2) நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்
(3) ஓர் இமாமின் கூற்று (4) ஒரு ஸஹாபியின் கருத்து
(5) ஒரு முதுமொழி

14. விவாகரத்துப் பெற்ற பெண்ணை மீளவும் மனைவியாக ஆக்கிக்கொள்வதற்கு ஏதுவாக இஸ்லாம் அனுமதித்துள்ள விவாகரத்து முறை
(1) தலாக் பாயின் (2) ஈலாஉ (3) லிஆன் (4) தலாக் ரஜஈ (5) பஸ்கு

15. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அறிஞர் சித்திலெப்பை பிரசுரித்த பத்திரிகையின் பெயர் யாது?
(1) முஸ்லிம் நேசன் (2) புதினாலங்காரி (3) அஸ்ராருல் ஆலம்
(4) முஸ்லிம் பாதுகாவலன் (5) அஸ்ஸவாப்

16. பின்வருவனவற்றுள் பல மதங்களின் இருப்பை இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது என்பதை மிகச் சரியாக விளக்கும் அல்-குர்ஆன் வசனம் எது?
(1) "உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள். இந்த கண்ணியம் அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டது."
(2) "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. ஏனெனில் வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது."
(3) "மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம்."
(4) "உமது இரட்சகன் நாடியிருந்தால், பூமியிலுள்ள அனைவரும் ஈமான் கொண்டிருப்பர். அவ்வாறு உமது இரட்சகன் விரும்பவில்லை."
(5) "வானங்கள் பூமியின் படைப்பும் அமைப்பும் உங்களது மொழிகளும் நிறங்களும் வித்தியாசமாக இருப்பதும் அவனைக் காட்டும் அத்தாட்சிகளைச் சேர்ந்தவையாகும்."

[பக். 3 ஐப் பார்க்க

17. 'அஹ்லுல்பைத்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவோர்
(1) நபி (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத் சென்றவர்கள்
(2) நபி (ஸல்) அவர்களை நேரில் சந்தித்த முஸ்லிம்கள்
(3) ஹிஜ்ரி முதல் அரை நூற்றாண்டில் வாழ்ந்தோர்
(4) நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்தோர்
(5) நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரும் மனைவிமார்களும்

18. தர்தீப் திலாவத், தர்தீப் நுஸுல் என்பன குறிப்பன முறையே
(1) அல்-குர்ஆன் அருளப்பட்ட முறை, ஓதப்பட்ட முறை
(2) அல்-குர்ஆன் ஓதப்பட்ட முறை, அருளப்பட்ட முறை
(3) அல்-குர்ஆன் அருளப்பட்ட முறை, எழுதப்பட்ட முறை
(4) அல்-குர்ஆன் தொகுக்கப்பட்ட முறை, ஓதப்பட்ட முறை
(5) அல்-குர்ஆன் ஒழுங்குபடுத்தப்பட்ட முறை, ஓதப்பட்ட முறை

19. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்புடைய முக்கிய தகவல்களைத் தரும் நூல்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) புதூஹுல் புல்தான், அர்ரஹீகுல் மக்தூம்
(2) கிதாபுல் உம்மு, அஹ்காமுஸ் ஸுல்தானியா
(3) முகத்திமா இப்னு கல்தூன், கிதாபு தபகாத் அல் கபீர்
(4) தாரீஹுல் கபீர், தாரீஹுர் ருஸுல் வல்முலூக்
(5) அஜாஇபுல் ஹிந்தி, புதூஹுல் புல்தான்

20. சூரத்துல் பகராவை ஓதியதன் பின்னர் கவிதை புனைவதைக் கைவிட்ட கவிஞர் யார்?
(1) இம்ரஉல் கைஸ்
(2) உத்பா பின் ஆமிர்
(3) வலீத் பின் முகீரா
(4) அல் முதனப்பி
(5) அல் கன்ஸா

21. பின்வருவனவற்றுள் பிரதானமாக எதன் / எவற்றின் அடிப்படையில் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா கட்டியெழுப்பப்பட்டுள்ளது?
(1) புலன்களும் பகுத்தறிவும்
(2) இறைவழிகாட்டல்
(3) மூடநம்பிக்கைகள் கலந்த இறைவழிகாட்டல்
(4) கனவுகளும் கற்பனைகளும்
(5) மனித உணர்வுகளும் வழிகாட்டல்களும்

22. 'ஸஹீபா ஸாதிகா' எனப்பட்ட ஹதீஸ் திரட்டு யாரால் எழுதப்பட்டது?
(1) அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி)
(2) அப்துல்லாஹ் இப்னு ஜ.்பர் (ரழி)
(3) அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)
(4) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)
(5) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)

23. அபூ அஸ்வத் அத்துவலி அல்-குர்ஆன் வசனங்களுக்கு உயிர்க்குறிகளையிட்ட நிகழ்வு எந்த கலீபாவின் காலத்தில் இடம்பெற்றது?
(1) அபூபக்கர் (ரழி)
(2) உமர் (ரழி)
(3) உஸ்மான் (ரழி)
(4) அலி (ரழி)
(5) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்)

24. இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் மாணவர்களுள் ஒருவர்
(1) முஸ்னி
(2) அபுல் காசிம்
(3) அஷ்ஷைபானி
(4) புவைதி
(5) இப்னு தைமியா

Past Papers Wiki



25. "அல் - குர்ஆன் படைக்கப்பட்டது" எனக் கூறும் குழுவினர்
(1) மு..தஸிலாக்கள் (2) முர்ஜிஆக்கள்
(3) கவாரிஜ்கள் (4) ஷீஆக்கள்
(5) ஜபரிய்யாக்கள்

26. பின்வருவனவற்றுள் கண்டி இராச்சியத்தில் முஸ்லிம்கள் அரசியலில் பெற்றிருந்த செல்வாக்கிற்குச் சான்றாக அமையும் கூற்று யாது?
(1) கி. பி. 1762 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த ஆங்கிலேய தூதுவரான ஜோன் பைபஸ் என்பவரை வரவேற்று, அழைத்து வர உதுமான் லெப்பை என்பவர் அக்கால மன்னனால் அனுப்பிவைக்கப்பட்டமை
(2) மாயாதுன்னை மன்னனின் (1521 - 1581) ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் போர்த்துக்கேயருக்கு எதிராக அம்மன்னனின் இராணுவத்தில் இணைந்து போராடியமை
(3) விஜயபாகு மன்னனின் (1055 - 1110) ஆட்சிக் காலத்தில் பெரியதம்பி மரிக்கார் என அழைக்கப்பட்ட ஒரு முஸ்லிம், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகச் செயற்பட்டமை
(4) மகா பராக்கிரமபாகு மன்னனின் (1153 - 1186) ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் 'அந்தரங்கதுர' எனும் வணிகத்துறை அபிவிருத்திக்கான மேல் சபையில் அங்கத்துவம் பெற்றிருந்தமை
(5) கி. பி. 1270 ஆம் ஆண்டில் தம்பதெனியவில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கி, முதலாம் புவனேகபாகு யாப்பகூவவை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்வதற்கு முஸ்லிம் தளபதி தாஹோர் ஒத்துழைப்பு நல்கியமை

27. அல் - குர்ஆன் குறிப்பிடுவதன் படி ரமழான் நோன்பின் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதான நன்மை யாது?
(1) உடல் ஆரோக்கியம் ஏற்படுதல்
(2) ஏழைகளின் பசியை உணர்தல்
(3) பாவச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெற வழிசெய்தல்
(4) விழித்திருந்து வணங்குவதைத் தூண்டுதல்
(5) இறையச்சம் ஏற்படுதல்

28. மரணித்த ஒருவரின் சொத்துக்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஜனாஸாவுக்குரிய செலவினங்கள்
B - வஸிய்யத்
C - மரணித்தவரின் கடன்கள்
D - வாரிசுகளுக்கிடையில் சொத்தைப் பங்கிடுதல்

மேலுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டிய சரியான ஒழுங்குமுறையைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D (2) A, C, B, D (3) B, A, C, D (4) C, A, B, D (5) D, A, B, C

29. அபூபக்கர் (ரழி) அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கை **அல்லாதது**
(1) மஜ்லிஸுஷ் ஷூராவை ஸ்தாபித்தமை
(2) அல் - குர்ஆனை ஒன்றுதிரட்டியமை
(3) போலி நபிமார்களுக்கெதிராகப் போராடியமை
(4) ஸகாத் கொடுக்க மறுத்தோருக்கு எதிராகப் போராடியமை
(5) உஸாமா (ரழி) தலைமையில் படையொன்றை சிரியாவுக்கு அனுப்பியமை

30. முஸ்லிம் விவசாயி ஒருவர் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு 3000 கிலோகிராம் நெல்லை அறுவடையாகப் பெறுகின்றார். அவரது வயலுக்கான நீர்ப்பாசனத்தை அரசாங்கம் வழங்குகின்றது எனில், அவர் அறுவடையின் போது எத்தனை கிலோகிராம் நெல்லை ஸகாதாக வழங்க வேண்டும்?
(1) 150 (2) 200 (3) 250 (4) 300 (5) 350

31. மற்றொருவரில் பொறாமை ஏற்படுவதனைத் தவிர்த்துக்கொள்ள நபி (ஸல்) அவர்கள் எடுத்துக்காட்டிய வழிமுறை யாது?
(1) பொறாமை உலக இன்பங்களுக்காக அலைந்து திரியக்கூடிய தன்மையை மனிதனில் ஏற்படுத்துகிறது என எண்ணுதல்
(2) சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு இறைவனே காரணம் என்ற கருத்தை உள்ளத்தில் ஆழப்பதித்தல்
(3) பொறாமையினால் தமக்கு ஏற்படும் தீங்கிலிருந்து இரட்சகனிடம் பாதுகாப்புத் தேடல்
(4) எம்மைவிட தாழ்ந்தோரை நோக்கி அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காகப் பெருமிதம் அடைதல்
(5) செல்வந்தனுக்கு அல்லது அறிவாளிக்குக் கொடுக்கப்பட்டது போன்று தனக்கும் கிடைத்தால் அதன் மூலம் தானும் நன்மை செய்யலாம் என எண்ணுதல்

[பக். 5 ஐப் பார்க்க

**32.** பின்வருவனவற்றுள் இஸ்லாமிய கொடுக்கல் வாங்கலோடு தொடர்புடைய **பிழையான** நடைமுறை யாது?
(1) இஸ்லாமிய வங்கி ஒன்றிலிருந்து ஒரு முஸ்லிம் தன் தேவைக்காக கடன் ஒன்றைப் பெறுகின்றபோது, அதற்காக மற்றொரு முஸ்லிம் பிணை நிற்றல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
(2) இரவலாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உபகரணத்திலிருந்து பயனடைந்து கொண்டமைக்கு குறித்தவொரு பணப்பெறுமதியை பதிலீடாகச் செலுத்துவது பொருத்தமான செயலாகும்.
(3) கடன் பெற்றவர் அக்கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடமானமாக வைக்கப்பட்ட பொருள் அல்லது சொத்திலிருந்து பயனடைந்து கொள்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
(4) விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையில் இணைப்பாளராகச் செயற்படும் தரகர் ஒருவர் அச்சேவைக்காக நியாயமான ஒரு கூலியைப் பெற்றுக் கொள்வதில் தவறேதும் கிடையாது.
(5) நோய், விபத்து காரணமாக ஏதேனுமொரு விடயத்துக்கு தன்னால் சமூகமளிக்க முடியாத பட்சத்தில் அதற்காக தன் சார்பாக மற்றொருவரை பொறுப்பாளியாக்குதல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**33.** சமூகப் பணிகள் சார்ந்த பொறுப்புக்களுக்கு ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவது தொடர்பான சரியான நடைமுறை யாது?
(1) அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவராக இருப்பதோடு சிறந்த அறிவு, ஆளுமை, பொறுப்புணர்ச்சி, நற்குணம் மற்றும் குடிமக்களுடன் பரிவு கொண்டிருப்பவர் பொறுப்புகளுக்கு நியமிக்கப்படல்
(2) தம் கூட்டத்தினர் மீது அன்பும் இரக்கமும் கொண்டிருக்கும் ஒருவர் அக்கூட்டத்தினருக்குத் தலைவராக நியமிக்கப்படுதல்
(3) இறுதித் தீர்ப்பு நாளில் தம் கண்ணியத்தை இழந்து அவமானத்திற்குட்படுவார் என்பதனால் பலவீனமானவர் உரிய பதவிக்கு நியமிக்கப்படாதிருத்தல்
(4) அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவரைத் தவிர்த்து மற்றொருவரை நியமிக்காதிருத்தல்
(5) தன் சேவைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர் நியமிக்கப்படுதல்

**34.** பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.
A - இறைவன் படைத்துள்ள இயற்கை வளங்களோடு மனித முயற்சி ஒன்றிணையும்போது முடிவுப் பொருட்கள் உற்பத்தியாகின்றன.
B - உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பொருட்களை நுகர்கின்ற உரிமையை தான் பிறக்கும் போதே பெற்றுக்கொள்கிறான்.
C - ஆடம்பரம், பெருமை, பகட்டு, கௌரவம் போன்றவை, பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவின்போது தவிர்க்கப்பட வேண்டிய அம்சங்களாகும்.
D - பொருட்கள், சேவைகள் என்பவற்றின் நுகர்வு நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளதோடு, அவை மீறப்படும் போது இறை தண்டனைக்கு ஆளாக நேரிடும்.
E - மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய போதைப்பொருள் போன்றவற்றை உற்பத்தி செய்வதும் வியாபாரம் செய்வதும் தடை செய்யப்படத்தக்க விதத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

மேலுள்ளவற்றுள் நுகர்வு பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டை விளக்கும் கூற்றுக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**35.** இஸ்லாமிய திருமணம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.
A - ஓர் ஆண் ஏக காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை குறித்த காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தன் மனைவிகளாக ஏற்றுக்கொள்ளல்
B - நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றிய இப்ராஹீம் (அலை), சுலைமான் (அலை) போன்றோர் பலதார மணம் புரிந்து வாழ்ந்த முறைகளை முழுமையாகப் பின்பற்றுதல்
C - ஒரு பெண்ணின் உடற் தேவைகளை நிறைவுசெய்யும் சக்தி, அவளை முழுமையாகப் பராமரிக்கும் பொருளாதார வசதி என்பன காணப்படுகின்றபோது நான்கிற்கு மேற்படாத பெண்களை திருமணம் செய்து கொள்ளல்
D - மனைவியரிடையே ஒரு கணவன் உளரீதியான அன்பை நீதமாக பகிர்ந்தளிப்பது சாத்தியமான ஒன்றல்ல என்பதை மனைவியர் புரிந்து கொள்ளல்
E - சகல மனைவியரையும் ஒரே விதமாகப் பராமரிக்க முடியாத ஆண் ஒரு பெண்ணை மாத்திரம் திருமணம் செய்து கொள்ளல்

மேலுள்ளவற்றுள் பலதார மணம் தொடர்பான சரியான இஸ்லாமியக் கூற்றுக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

PAST PAPERS WIKI

**36.** இஸ்லாத்தின் அறிமுகம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.

A - கி.பி. 610 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய கரையோரங்களில் வலிமைமிக்க வணிகர்களாக அறேபியர் நிலைபெற்றிருந்தனர்.

B - நபியவர்களின் தூதுவராக சீனாவுக்குச் சென்ற வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) இலங்கைக்கும் வருகை தந்து, இலங்கை அரசனுக்கு இஸ்லாம் பற்றிய செய்திகளை வழங்கினார்.

C - இலங்கை மன்னன் மூன்றாம் அக்கபோதியினால் அறேபியாவுக்கு (மதீனா) அனுப்பப்பட்ட தூதுவரின் பணியாள் இலங்கைக்குத் திரும்பி இஸ்லாம் பற்றிய செய்திகளை வழங்கினார்.

D - ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் கொடுமைகளுக்கு அஞ்சிய ஹாஷிம் கிளையினரில் சிலர் அறேபியாவைத் துறந்து தென்னிந்தியக் கரையோரங்களிலும் இலங்கையின் வட மற்றும் தென் கரையோரங்களிலும் குடியேறினர்.

E - பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த காலப்பகுதியில் தலைநகரில் சில குறிப்பிட்ட பகுதிகளை அறேபிய வணிகர்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தான்.

மேலுள்ளவற்றுள் இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் தொடர்பாக விளக்கும் கருத்துக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**37.** பின்வரும் கடமைகளை அவதானிக்குக.

A - ஐங்காலத் தொழுகை

B - பாதையைச் செப்பனிடுதல்

C - ஊதியத்துக்கேற்ப கடமை புரிதல்

D - பெற்றோருக்கு உபகாரம் செய்தல்

E - பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணித்தல்

F - கணவன் தனது குடும்பத்துக்காகச் செலவிடுதல்

மேலுள்ளவற்றுள் 'பர்ளு ஐன்' சார்ந்த கடமைகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D (2) A, B, C, F (3) A, C, D, F (4) B, D, E, F (5) C, D, E, F

**38.** பின்வருவனவற்றை அவதானிக்குக.

A - எந்த மாதத்திலும் நிறைவேற்றலாம்

B - தவாபு செய்தல்

C - ஸஃயு செய்தல்

D - குறிப்பிட்ட நாட்களில் நிறைவு செய்தல்

E - அறபாவில் தரித்தல்

F - மஸ்ஜிதுந் நபவியைத் தரிசித்தல்

மேலுள்ளவற்றுள் ஹஜ்ஜுடன் தொடர்புடைய கடமைகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D (2) A, B, E, F (3) A, D, E, F (4) B, C, D, E (5) C, D, E, F

**39.** பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.

A - கணவன் மனைவியரிடையே மனநிம்மதி, அன்பு, பாசம் என்பவற்றினூடாக பரஸ்பரம் உதவிக்கொள்ளல்

B - விபச்சாரம், ஓரினச் சேர்க்கை, சுய இன்பம் காணல் போன்ற தகாத பழக்கங்களைத் தவிர்த்தல்

C - வாலிபர்களில் உடல் ஆரோக்கியமும் பொருளாதார வசதியும் உடையோர் திருமணம் செய்து கொள்ளல்

D - கணவன், மனைவியரிடையே பொறுப்புக்கள் பகிரப்படுவதன் மூலம் ஆரோக்கியமான குடும்பம், சமூகம் உருவாக வழிசெய்தல்

E - மனித வாழ்வின் அடிப்படையாக இஸ்லாத்தில் திருமணம் கருதப்படுதல்

மேலுள்ளவற்றுள் இஸ்லாமிய திருமணத்தின் நோக்கங்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

[பக். 7 ஐப் பார்க்க

**40.** கணவனை இழந்த ஒரு கர்ப்பிணிப் பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய கால அளவு யாது?
(1) ஒரு மாத காலம்
(2) மூன்று மாதவிடாய்க் காலம்
(3) மூன்று மாத காலம்
(4) நான்கு மாதங்களும் பத்து நாட்களும்
(5) பிரசவம் நிகழும் காலம் வரை

**41.** ஹதீஸ்களில் மிக உயர்ந்த தரத்தில் கணிக்கப்படுவது
(1) முதவாதிர் (2) ஸஹீஹ் (3) ஹஸன் (4) மவ்ழூஉ (5) மர்பூஉ

- **42** முதல் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் X. Y எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. Y நிரலில் உள்ளவை X நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எனினும் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி X நிரலுக்கேற்ப Y நிரலிலுள்ள விடயங்களைப் பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தும் போது ஒழுங்குமுறையில் அமையும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

**42.**

| X | Y |
|---|---|
| (i) தௌஹீத் அஸ்மா வஸ்ஸிபாத் | A - ஹதீஸ்களை ஒன்றுதிரட்டல் |
| (ii) ஸகாத் பெறத் தகுதியற்றோர் | B - அஹ்லுர் ரஃயி |
| (iii) ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரீ (ரஹ்) | C - உயிரைப் பாதுகாத்தல் |
| (iv) ஹனபி மத்ஹப் | D - அல்லாஹ்வுக்கு ஒப்பாக எதுவுமே இல்லை |
| (v) ழரூரிய்யாத் | E - நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, D, E, A, B
(4) D, E, A, B, C (5) E, A, B, C, D

**43.**

| X | Y |
|---|---|
| (i) தக்வா | A - அல்லாஹ்விடம் தன் காரியங்களை முழுமையாக ஒப்படைத்தல் |
| (ii) தவக்குல் | B - உலகப் பற்றுக்கும் துறவறத்துக்கும் இடையில் சமநிலை பேணல் |
| (iii) ரிழா | C - இறைவனுக்கு அஞ்சிய வகையில் மனித நடத்தை அமைதல் |
| (iv) ஸுஹ்த் | D - பாவம் என சந்தேகிக்கும் விடயங்களைக் கைவிடல் |
| (v) வரஃ | E - இறைவனது தீர்ப்பிலே திருப்தி அடைதல் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, A, E, B, D
(4) D, A, E, B, C (5) E, A, B, C, D

**44.**

| X | Y |
|---|---|
| (i) சாதாரண குற்றங்கள் | A - ஜராஇமுல் ஹுதூத் |
| (ii) பழிவாங்கல் மற்றும் நட்டஈடு பெறத்தக்க குற்றங்கள் | B - ஸரிகா |
| (iii) திருட்டுடன் தொடர்புடைய குற்றங்கள் | C - தஃஸீர் |
| (iv) போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய குற்றங்கள் | D - ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா |
| (v) தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள் | E - ஷுர்புல் ஃகம்ர் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, D, B, E, A
(4) D, E, A, B, C (5) E, A, B, C, D

[பக். 8 ஐப் பார்க்க

**45.**

| X | Y |
|---|---|
| (i) மூன்றாம் ஸ்தானத்தில் வாரிசுரிமைப் பங்குகளைப் பெறுவோர் | A - அஸபா |
| (ii) அல்-குர்ஆன், சுன்னாவில் வராஸத் பங்குகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளோர் | B - ஹஜ்பு நுக்ஸான் |
| (iii) வாரிசுச் சொத்தில் முக்கியமான பங்குகள் பகிரப்பட்ட பின்னர் மீதமுள்ளவற்றைப் பெறுவோர் | C - ஹஜ்பு ஹிர்மான் |
| (iv) சிலருக்குக் கிடைக்கவிருந்த வாரிசுரிமைப் பங்குகள் குறைந்து போதல் | D - துல்-அர்ஹாம் |
| (v) சிலருக்குக் கிடைக்கவிருந்த வாரிசுரிமைப் பங்குகள் முற்றாக இல்லாமல் போதல் | E - அஸ்ஹாபுல் புருள் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, D, E, A, B
(4) D, E, A, B, C (5) E, A, B, C, D

- **46** தொடக்கம் **50** வரையிலுள்ள வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | நபி (ஸல்) அவர்கள் தமக்கு வஹியாக அறிவிக்கப்படாத விடயங்களில் தனது இஜ்திஹாதைப் பயன்படுத்தித் தீர்ப்பளித்துள்ளார்கள். | முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் யெமன் நாட்டுக்கு ஆளுநராக அனுப்பப்பட்டபோது அவர் தனது இஜ்திஹாதின் அடிப்படையில் செயற்பட அனுமதிக்கப்பட்டது. |
| **47.** | அனைத்து மக்களுக்குமான போதியளவு உணவு, ஆடைகள், வாழ்வதற்கான வீடு என்பவை நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தில் மிக முக்கியமானதாகும். | ஸதகா, ஹிபத், ஹதியா, அகீகா, உழ்ஹிய்யா போன்றவை இஸ்லாம் குறிப்பிடும் செல்வப் பங்கீட்டு அம்சங்களுள் சிலவாகும். |
| **48.** | இஸ்லாம் வறுமையை ஆதரித்து, அது ஓர் இறை அருள் என்றும் அது நீக்கப்படக்கூடாதது என்றும் கருதுகிறது. | நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் வறுமையோடு வாழ்ந்து, மற்றவர்களையும் வறுமையோடு வாழும்படி ஊக்குவித்தார்கள். |
| **49.** | நபி (ஸல்) அவர்கள் தன் குடும்பத்திற்காக ஓராண்டுக்குத் தேவையான உணவுப் பண்டங்களைச் சேமித்து வைத்திருந்ததாக உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். | ஒரு முஸ்லிம் தன் மரணத்தின் பின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக சொத்துக்கள் எதனையும் விட்டுச் செல்வதை இஸ்லாம் ஊக்கப்படுத்தவில்லை. |
| **50.** | கவர்ச்சிகரமான மாயைகளைக் கற்பிதம் செய்து, உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி, அதிக இலாபம் ஈட்டும் வணிகம் இஸ்லாத்தில் வரவேற்கத்தக்க முயற்சியாகக் கருதப்படுகிறது. | அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற வியாபாரியை 'அத்தாஜிருஸ் ஸதூக்' என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். |

PAST PAPERS WIKI

* * *

Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

**44 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) 'ஹுகூகுல் இபாத்' என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

   (ii) உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருக்காக ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (iii) ஜமாஅத்துத் தொழுகை ஏற்படுத்தும் சமூக ரீதியான பயன்கள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) ஸகாத் ஏன் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதனை **நான்கு** விடயங்களினூடாகத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

2. (i) உலூமுல் குர்ஆன் கலையில் முஹ்கம் மற்றும் முதஷாபிஹ் என்பனவற்றினால் கருதப்படுவன யாவை? (02 புள்ளிகள்)

   (ii) ஓர் ஆண் தற்காலிகமாகத் திருமணம் செய்துகொள்ள **அனுமதிக்கப்படாதோர்** நால்வரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (iii) இஸ்லாத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்போர் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் **மூன்றை** விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) 'வஹ்ததுல் வுஜூத்' என்பதனை வரையறுத்து, அதன் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) இத்தாவின் நோக்கங்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

   (ii) மரணித்த ஒருவரின் சொத்து அதன் வாரிசுதாரர்களான ஆண், பெண்ணுக்கிடையில் சமமாகப் பகிரப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டைச்** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   (iii) 'தஸவ்வுப்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, அதன் தோற்றப் பின்னணியை விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) ஒரு முஸ்லிம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது பேணவேண்டிய பண்பாட்டு விழுமியங்கள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

4. (i) அல்-குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கு ஹதீஸ் துணைபுரியும் வழிமுறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டை** உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸ்கள் நூலுருப்படுத்தப்பட்ட வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அதனால் முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைத்த அனுகூலங்கள் **நான்கினை** விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) "ஷரீஆ மாறுபட்டிருந்த போதிலும் இஸ்லாம் என்றும் ஒரு நிலையான தீனாகவே காணப்படுகின்றது." விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) கருத்து வேறுபாடுகளின்போது பேணவேண்டிய ஒழுக்கங்கள் **ஐந்தை** இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விளக்குக. (10 புள்ளிகள்)

6. (i) ஒரு முஸ்லிமின் வீட்டுச் சூழல் சிறந்து விளங்க இஸ்லாம் குறிப்பிடும் போதனைகள் **ஐந்தை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) "குடும்ப வாழ்வில் கணவன், மனைவி எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தீர்வுக்கு இஸ்லாம் சிறந்த ஒழுங்கு முறையொன்றை முன்வைத்துள்ளது." விளக்குக. (10 புள்ளிகள்)

7. (i) ஜாஹிலிய்யாக் கால சமூகத்தினரிடையே காணப்பட்ட தவறான நடத்தைகள் **ஐந்தைக்** குறிப்பிட்டு, அவற்றிலிருந்து அச்சமூகத்தை இஸ்லாம் மீட்டெடுத்த விதம் பற்றி ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்கள் **ஐந்தை** விளக்குக. (10 புள்ளிகள்)

8. பின்வரும் தலைப்புகள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இஜ்மாஉ ஸரீஹ் (05 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தில் உழைப்பின் முக்கியத்துவம் (05 புள்ளிகள்)

(iii) இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்புகள் (05 புள்ளிகள்)

(iv) இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள உயர் அந்தஸ்த்து (05 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library